**தலைப்பு 291 – கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 291 - கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதிய கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்புகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட தொகுப்பு அறிக்கை 2024 யூன் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்கு உரித்தான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி

நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம், திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின ் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள ் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல ் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய ்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந ்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதன, இயந்திர உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டைப் பிராந்திய பொறியியல் அலுவலகங்களில் உள்ள காணி மதிப்பிடப்பட்டு அப் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் காணிகள் மதிப்பிடப்படுவதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2021 முதல் 2023 வரை கோரப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் எந்த பதிலும் கிடைக்கப்பெறவில்லை. | காணி மதிப்பிடப்பட்டு அப் பெறுமதி நிதியல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | உரிமை திணைக்களத்தின் வசப்படுத்தப்பட்டிராத ஹெக்டேயர் 0.7941 அளவிலான 03 காணிகள் ரூபா 42,007,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் நிதிசாரா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிமை திணைக்களத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திணைக்களத்திற்கு உரிமையான சொத்துக்கள் மாத்திரமே கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களத்திற்கு உரித்தான 08 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கொடவாய விடுமுறை விடுதியில் ஒரு மோட்டார் சைக்கிள் ரூபா 15,000 ஆகவும் ரூபா 40,000 ஆகவும் இரு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சில மோட்டர் சைக்கிள்கள் மாத்திரமே இயக்க நிலையில் உள்ளதுடன் சகல மோட்டார் சைக்கிள்களும் எதிர்காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கில் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சகல மோட்டார் சைக்கிள்களும் மதிப்பிடப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | செயற்திட்டச் செயற்பாடுகளிற்காக மொறட்டுவை மற்றும் நீர்கொழும்பு பிராந்திய பொறியியல் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 04 இயந்திர உபகரணங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிசாரா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந் நான்கு இயந்திரங்களில் 03 இது வரையிலும் சேவையில் இருந்து அகற்றப்பட்டுள்ளன. Ko,atsu WA 200 Loader – Galle இயந்திரம் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இயந்திரம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கும் சேவையில் இருந்து அகற்றப்பட்ட இயந்திரம் திருத்தப்படுவதற்கோ அல்லது கைதவிர்ப்பு நடவடிக்கைகளிற்காக அனுப்பிவைக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) கட்டுநிதி மீதி**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரியின் கணனி அச்சீட்டின் படி, ஏனைய தலைப்பிற்காக அறிக்கையிடப்படும் நிறுவனத்தினால் சேகரிக்கப்படும் வருமானம் ரூபா 59,195,935 ஆகவும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 2,708,221 ஆன போதிலும் அம் மீதிகள் கட்டுநிதி இணக்கக் கூற்றில் முறையே ரூபா 42,932,026 ஆகவும் ரூபா 2,182,012 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்று மீதியின் படி கட்டுநிதி இணக்கக் கூற்று தயாரிக்கப்படுகையில் சகல குறுக்குப் பதிவுகளின் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் நீக்கப்பட்டு உள்ளபடியான திறைசேரிக் கட்டுநிதி தவிர்ந்த கிடைக்கப்பெற்ற ஏனைய பெறுவனவுகளும் திணைக்களக் கொடுப்பனவு அல்லாத திணைக்கள கட்டு நிதி மூலம் செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் சீராக்கப்பட்டு மீதி பெறப்பட்டுள்ளது. | திறைசேரி கணனி அச்சீட்டின் படி, ஏனைய தலைப்பிற்காக அரச கணக்கீட்டு சரியான மீதிகள் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கட்டுநிதிச் சீராக்கற் கூற்றிற்கு சீராக்கப்பட வேண்டிய வைப்புக் கணக்கு பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் (குறுக்குப் பதிவுகள்) முறையே ரூபா 8,859,698 ஆகவும் ரூபா 1,014,366 ஆகவும் அறிக்கையிடல் நிறுவனத்தால் காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மிகை அறவீடுகளான ரூபா 316,520 தொகை கட்டுநிதி சீராக்கற் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | நிதிச் செயலாற்றல் கூற்றிலான மீதியின் படி, கட்டுநிதிச் சீராக்கக் கூற்று தயாரிக்கப்படுகையில் சகல குறுக்குப் பதிவுகள் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் அகற்றப்பட்டு உள்ளபடியாக திறைசேரிக் கட்டு நிதி தவிர்ந்த பெறப்பட்ட ஏனைய பெறுவனவுகள் மற்றும் திணைக்களக் கொடுப்பனவுகள் அல்லாத திணைக்களத்தின் சம்பவக் கட்டுநிதி மூலம் செலுத்தப்பட்ட ஏனைய கொடுப்பனவுச் சீராக்கத்தினூடாக மீதி பெறப்பட்டுள்ளது. | திறைசேரியின் கணனி அச்சீட்டின் படி, சரியான மீதிகள் காண்பிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனத்திற்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2020 செப்தெம்பர் 03 வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்டிருந்த 04 அனுமதிப்பத்திரங்களுக்கும் 2020 செப்தெம்பர் 07 ஆம் திகதி முதல் 2021 செப்தெம்பர் 06 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு உரித்தாக அங்கீகரிக்கப்பட்ட மண் கியூப்களின் அளவைப் பார்க்கிலும் கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 72,895,000 தொகையும் ரூபா 1,688,515 தொகையுமான கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>எனினும், லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனத்தினால் ரூபா 64,056,000 மாத்திரமே திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாகக் கணக்கீடு செய்யப்பட்டு அத் தொகை 5 ஆண்டுகளிற்குள் செலுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தமை கணக்காய்விற்குச் சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்டது. | இவ் வேறுபாடு குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதுடன் செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய பணத்தைச் செலுத்தி முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் படி ஓர் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய சரியான கட்டணத்தை விரைவாக அறிவிட்டுக் கொள்தற்கு அவசியமான முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் உருவாதல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய இல. 255/2017 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணான வகையில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 செலவின விடயங்களிற்கு ரூபா 10,948 தொகையான ஏற்பாட்டு சேமிப்பைப் பார்க்கிலும் ரூபா 5,582,213 தொகையான பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | ஏற்பாடுகள் போதாமை, மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட இயலாதிருந்தமை, அத்தியாவசியமான செலவினங்கள் ஏற்படல் மற்றும் திடீர் கரையோரத் தளங்களிற்காக தொழிலாளர்களை ஈடுபடுத்தல், ஆண்டின் போது, அத்துமீறிய நிர்மாணிப்புகள் சில உடைத்து அகற்றப்பட்டமையால் போக்குவரத்துச் செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட இயலாத நிலையில் உயர்ந்தமையால் 2024 ஆம் ஆண்டின் போது செலுத்த நேர்ந்தது. | பிரமாணங்களின் பிரகாரம் செலவினங்கள் மட்டுப்படுத்தப்படுவதற்கும் சேமிப்பைப் பார்க்கிலும் பொறுப்புகள் ஏற்படாத வகையிலும் செயற்பட வேண்டும். |

**2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த ணேடியதுடன் அம் முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு இதன் படி முறைமையை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுவத்துவதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அம் மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் "2022.08.08 ஆம் திகதிய டீஎம்ஏ – 02.ஃ.2022(ை) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் படி, இது இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு" உறுதிப்படுத்தப்படாது மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்காய்வு பிரிவு மற்றும் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் எடுத்துக் காட்டப்பட்ட கணக்காய்வு அவதானிப்பைக் கவனத்திற்கொண்டு அவற்றைத் திருத்திக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன். | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்கியிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| | **அவதானிப்புகள்** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 214 | - | தேவையான விபரங்களடங்கிய தகவல்களை உள்ளடக்கிய பொறுப்புகள் மற்றும் கடப்பாட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுகல கொடுப்பனவுகளுக்குமான பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ITMIS முறைமையில் உள்ளடக்கப்படுவதுடன் தேவையேற்படுகையில் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை உள்ளது. | நிதிப் பிரமாணத்தின் படி ஓர் பதிவேடு பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2006 இன் அரச பெறுகை நடைமுறை விதிக் கோவையின் 2.14.1 இற்கு உரித்தான 2020 மார்ச் 25 ஆம் திகதிய 35 ஆம் இலக்க மேலதிகச் சேர்க்கை | 35 மில்லியன் | மதிப்பீட்டுத் தொகை ரூபா 17 மில். ஊம் ரூபா 18 மில் உமான மொறட்டுவை லுணாவை மற்றும் களுத்துறை கரையோர எல்லைச்சுவர் அமைப்பதற்கு தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் கருங்கல் கொள்வனவு, அமைச்சின் பெறுகைக் குழுவினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இது திணைக்கள பெறுகைக் குழுவினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் படி பணிப்பாளர் நாயகத்தின் முழு அங்கீகாரத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி விலைமனுக் கோரல் முறை பயன்படுத்தப்பட்டு பொருட்களுக்கான விலைமனுக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | பெறுகை நடைமுறை விதிக் கோவையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இல. 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் | - | திணைக்களத்தின் 28 வாகனங்கள் மற்றும் 18 இயந்திர உபகரணங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனைகளை முறைப்படி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | 05 ஆண்டு காலத்திற்கு மேலாக ஒரே பணியிடத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உட்பட வேண்டிய போதிலும் ஒன்றிணைந்த சேவையில் 04 பதவிகளிற்கு உரித்தான 53 உத்தியோகத்தர்கள் 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதியும் 37 உத்தியோகத்தர்கள் 15 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் வருடாந்த இடமாற்றம் பெறப்படாது திணைக்களத்தில் கடமையாற்றி வந்துள்ளனர். | ஒவ்வொரு ஆண்டிலும் 05 ஆண்டு காலத்திற்கு மேல் பணியாற்றிய உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாக அமைச்சுடன் இணைந்து நீண்ட காலமாக திணைக்களத்தில் பணி புரிந்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றத்தை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1981 இன் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 7 (உ) மற்றும் 12 ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் ஆலோசனைச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கரையோரமுகாமைத்துவ திருத்தப்பட்ட திட்டத்தின் 6.4.6 பந்தியின் படி. பொது மக்களுக்கு தேவையான பொது அபிவிருத்திப் பணி நடவடிக்கைகளிற்காக மாத்திரம் கரையோர கரைப் பகுதி (கரையோர வலயம்) விடுவிக்கப்படுவதற்கு கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ ஆலோசனைச் சபையின் பரிந்துரையில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படக் கூடிய போதிலும் 2021 திசெம்பர் முதல் 2023 ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் தனிப்பட்ட 81 விண்ணப்பங்களிற்கு நிர்மாணிப்பிற்கான | அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு வேறு மாற்று வழிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் நியாயமான விடயங்களைக் கருத்திற்கொண்டு கரையோரப் பகுதிக்கு நேரும் பாதகமான தாக்கத்தைக் குறைத்து ஆலோசனைச் சபை கரையோரப்பகுதியில் அபிவிருத்திப் பணிக்கான பரிந்துரைகளை வழங்குகின்றது. | அதிகாரச் சட்டத்தின் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கத்தல் வேண்டும். |

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் கரையோர வலயத்திற்கு நேர்ந்த பாதகமான தாக்கத்தைத் தடுக்கவோ அல்லது குறைக்கக் கூடிய நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி நிலையைப் பெற்றிராமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது இனங்காணப்பட்ட 2,763 அனுமதியற்ற நிர்மாணிப்புகளில் 2,445 நிர்மாணிப்புகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணிப்புகள் முறைப்படி உடைத்து அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கரையோரப் பகுதியிலும் அதிபாதுகாப்பு வலயங்களில் உள்ளவற்றை விரைவாக அகற்றுவதற்கும் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குள்ள எல்லைக்குள் உள்ள நிர்மாணிப்புகளுக்காக அனுமதி வழங்கப்படுவதற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | முறையான செயற்பாட்டில் அனுமதியற்ற நிர்மாணிப்புகளை தாமதமின்றி அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2015 முதல் 2023 வரை உடைத்து அகற்றுவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற நிர்மாணிப்புகளிற்காக திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,853,006 தொகையில் 85 சதவீதமான ரூபா 3,280,780 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த முகவரிகளில் இல்லாதவர்களின் பணத்தை அறவிட்டுக்கொள்வதில் சிக்கல் நிலவுகின்றது. இச் செலவினத்தை அறவிடுவதற்காக சட்டப் பிரிவால் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. | திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன் (Outcome) பெற்றுக்கொள்ளப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிகழ்நிலை (online) முறை மூலம் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 2019 பெப்ரவரி 22 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அம் முறைமையில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்டமை, முறைமைக்கு அப்பால் பௌதீக ரீதியாக அனுமதி வழங்கப்படல், கள ஆய்வுகளை மேற்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க காலம் எடுத்தல், தீர்மானம் எடுக்கையில் கடல் எல்லை மற்றும் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்படும் தூரம் நிகழ்நிலை தகவல் முறைமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட இயலாமை போன்ற விடயங்கள் காரணமாக முறைமை ஸ்தாபிக்கப்பட்டமையால் எதிர்பார்க்கப்பட்ட | கரையோர எல்லையில் இருந்தான தூரத்தைப் பெற்றுக்கொள்வதிலான துல்லியத்தன்மை 100 சதவீதமளவில் உறுதிப்படுத்த இயலாதிருந்தமையால் இதனை நிகழ்நிலை முறைமையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | நிலவும் சிக்கல்களைச் சீராக்கி நிகழ்நிலைத் தகவல் முறைமையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுமதிப்பத்திர வழங்கல் காலம் குறைக்கப்படுதல் எனும் நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வெள்ள நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வாக களுகங்கை முகத்துவாரம் விரிவாக்கப்பட்டதை அடுத்து களுத்துறையைச் சூழ உள்ள கரையோர மண்ணரிப்பு பாரிய சிக்கலாகியது. அக் கடலரிப்பை தடுக்கும் தீர்வாக 2017 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை ரூபா மில்லியன் 189 செலவிடப்பட்டு 19 செயற்திட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | களுகங்கை முகத்துவார கலிடோ மணற்கரை முற்றாகக் கரைந்து சென்றதை அடுத்து இது இயற்கையாக முன்னைய நிலைக்குக் கொண்டுவருவதற்காக எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் களுத்துறை வெள்ளக் கட்டுப்பாட்டிற்குத் தடையாக அமையலாம் என களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது தொடர்புபட்ட நிறுவனங்கள் எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணத்தால் 2023 ஆம் ஆண்டின் போது இடைநிறுத்தப்பட்டது. | சேலவிடப்பட்ட ரூபா 189 மில்லியன் தொகை ஆக்கபூர்வமானதாக நிலையான தீர்வைப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கை தொடர்புபட்ட நிறுவனங்களுடன் தொடர்புபட்டு செயற்பட வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|

களுத்துறை கலிடோ கரையோரப்பகுதியில் கடலரிப்பு மற்றும் இதனை அண்மித்த வீதியில் மண்ணிரப்புவதைத் தடுப்பதற்காக ஓர் தடுப்புச் சுவர் நிர்மாணிக்கப்படுவதற்கு தேவையான 20 தொன் எக்ஸ்கவேட்டர் இயந்திரத்தில் இருந்து 650 இயந்திர மணித்தியாலங்களும் 01 கியூப் லோடர் இயந்திரத்தில் இருந்து 300 மணித்தியாலங்களும் சேவை பெறப்படுவதற்காக 2021 ஆம் ஆண்டின் இறுதியில் ஒப்பந்தமிடப்பட்ட வழங்குனர்களுக்கு முறையே 213.5 மணித்தியாலங்களிற்காக ரூபா 1,184,925 தொகையும் 49.3 மணித்தியாலங்களிற்காக ரூபா 322,915 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிராததுடன் வேலைத்தளத்தின் செயற்பாடுகள் முறைப்படி செயற்படுத்தப்பட்டிராமையால் அவ் உத்தியோகத்தர்களின் அனுமதியுடன் வழங்குனர்கள் பணியை இடைநிறுத்தி வேலைத்தளத்தில் இருந்த இயந்திரங்களை அகற்றியிருந்தனர். இதன் படி வேலைத்தளத்தின் எஞ்சிய வேலைகளிற்காக 2023 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட விலைகள் 2021 மதிப்பீட்டைப் பார்க்கிலும் ரூபா 1,814,790 தொகையால் அதிகரித்திருந்தன. அவ்வாறு விலை மனுக்கள் கோரப்பட்டதன் மூலமாக பெறப்பட்ட ‘‘எக்ஸ்கவேட்டர் இயந்திரம் அடிக்கடி செயலிழந்ததன் காரணமாக மற்றைய இயந்திரத்தைப் பயன்படுத்த இயலாதமையால் 2023 யூலை முதல் ஆகஸ்ட் 11 ஆம் திகதி வரையான செயற்பாடற்ற காலத்திற்காக ரூபா 1,756,280 தொகையைச் செலுத்த நேரிட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலைத்தளத்தின் செயற்பாடுகள் செயலிழந்த நிலையில் இருந்தன.

வேலைத்தளத்திற்கு அண்மையில் மண் குவிக்கப்படுதல் மற்றும் அடிப்படை வேலை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இயந்திர மணித்தியாலங்கள் செலவிடப்பட்டிருந்தன. நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக விலைகள் கூடியளவு அதிகரித்தமையால் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இயந்திர வழங்குனரின் குறைபாடின்றியும் திணைக்களத்தின் வழங்கல்களில் தாமதம் அல்லது இயந்திர திருத்தவேலைகள் போன்ற வேறு காரணங்களால் மற்றைய இயந்திரம் விளைவற்றிருக்கையில் அத்தகைய விளைவற்ற காலத்திற்காக ஆகக் குறைந்த மணித்தியாலங்களிற்குச் செலுத்த வேண்டும்.

முறையான திட்டத்துடனும் கண்காணிப்புடனும் சிக்கனத்துடனும் வேலைத்தளத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமை அலுவலகம், பிராந்திய பொறியியல் அலுவலகம் மற்றும் விடுமுறை விடுதிகளிற்கு இணைக்கப்பட்டிருந்த 11 வாகனங்கள் திருத்த வேலைகள் மற்றும் சிறிய குறைபாடுகளுடனான நிலையில் 2 வருடங்களுக்கு அண்மித்த காலமாக ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்தன. | 03 வானங்கள் திருத்த வேலைகளிற்காக மதிப்பீடுகள் கோரப்பட்டிருந்ததுடன் ஒரு வாகனத்தின் திருத்தவேலைகள் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. | 2022 சனவரி 25 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்பட்டு வாகனங்களைத் திருத்தி ஓட்டக் கூடிய நிலைக்குக் கொண்டுவருவதற்கோ அல்லது ஓட்டத்திற்கு உகந்ததற்றதாயின் கைதவிர்ப்பு நடவடிக்கைச் செயற்பாட்டிற்காக அனுப்பிவைக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதி கரையோரப்பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 5,800,000 பெறுமதியான டபிள் கப் வாகனத்தின் உரிமையைக் கைமாற்றுவதற்கோ அல்லது அவ் வாகனத்தை திணைக்களத்திற்கு மீளக் கையளிக்கப்படுவதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ் வாகனத்தின் உரிமையைஒப்படைப்பதற்கு தேவையான மாதிரிப் படிவங்கள் நிரப்பப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் 2023.10.06 ஆம் திகதி இது தொடர்பாக விசாரித்து கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம், வாகனத்தின் உரிமையைக் கைமாற்றுவதற்கோ அல்லது திணைக்களத்திற்கு மீளப் பெற்றுக் கொள்ளப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கரையோர வலயத்தில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகளுக்காக நிகழ்நிலை முறைமையின் மூலம் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக ரூபா 5,000,000 இற்கு ஓர் முறைமையைத் தயாரிப்பதற்காக 2016 யூன் 09 ஆம் திகதி இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல் நிறுவகத்துடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், பின்னர் அந் நிறுவனத்தினால் அச் செயற்பாடு ரூபா 14,528,000 இற்கு தனியார் பகுதியினருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் ரூபா 9,528,000 தொகை மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது. | இச் செயற்பாடு ரூபா 5 மில்லியனிற்கு மேற்கொள்ளப்படுவதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவியல் நிறுவகத்துடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்து. எவ்வாறெனினும், அந் நிறுவனத்தினால் சகல பெறுகைச் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு ரூபா 14,528,000 தொதகையான ஆகக் குறைந்த விலையை முன்வைத்த ஓர் தனியார் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை மதிப்பீட்டைச் சரியாக மதிப்பிட வேண்டியதுடன் உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதிக்கு சேவையை வழங்குவதற்குத் தவறியிருப்பின் குறித்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்து மீளப் பெறுகையைப் பின்பற்றி ஏற்ற வழங்குனர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும். |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இயந்திரத் திருத்தவேலைச் செலவினங்கள் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 3,183,897 தொகை செலுத்தித் திருத்தப்பட்ட 3 எக்ஸ்கவேட்டர் இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் செயற்திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தன. மேலும் இதில் ஒரு எக்ஸ்கவேட்டர் இயந்திரத்தின் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்படாது ஒரு மணித்தியாலத்திற்கு 24 லீற்றர் பயன்படும் வகையில் கணிப்பிட்டு 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 4500 இயந்திர மணித்தியாலங்களுக்காக எரிபொருள் சமப்படுத்தப்பட்டிருந்தது. | அரசாங்கச் செலவினங்கள் மட்டுப்படுத்ததன் காரணமாக சகல திருத்தவேலைகளும் இடைநிறுத்தப்பட்டிருந் தமையால் இயந்திரம் மேலும் உக்கலடைவிற்கு உட்பட்டிருந்தது. | செயலிழந்த இயந்திரத்தைத் திருத்தி செயற்திறனான முறையில் பயன்படுத்துவதற்கும், எரிபொருள் பயன்பாட்டு ஆய்வுகள் முறைப்படி மேற்கொள்ளப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மொறட்டுவ லுணாவை கரையோரப் பாதுகாப்புச் சுவர் நிர்மாணிப்புச் செயற்திட்டம் | | |
| (i) | மொறட்டுவ லுணாவை கடலரிப்பைப் பாதுகாப்பதற்காக 100 மீட்டர் அளவு நீளத்திற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்கச் சுவர் 300 மீட்டர்கள் வரை நீடிப்பதற்காக தேவையான இயந்திரங்களும் மூலப் பொருட்களும் கொள்வனவு செய்யப்படுவதற்காக 2021 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் ரூபா 24,999,825 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு ஆண்டின் இறுதியில் சுவர் 410 மீட்டர் வரை நீடிக்கப்பட்டு மதிப்பீடு ரூபா 36,287,012 வரை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் இப் பக்கச் சுவர் நீடிக்கப்பட்டதற்கான தேவைப்பாடு தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்தம் வழங்கப்படுகையில் நாட்டின் பொருளாதார மற்றும் நிதி நிலைப்பாடு தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளின் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்திற்காக 2021 ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னர் தேவையான மூலப்பொருட்கள் வழங்குவற்கு ரூபா 11,960,100 ஆன உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதிக்கு உடன்பட்ட வழங்குனர் பொருட்களை வழங்குவதற்கு இடைநடுவில் நிறுத்தியதன் காரணமாக மூலப் பெறுகையில் வழங்கியிராத 4,549 கற்களை வழங்குகையில் திணைக்களத்திற்கு ரூபா 1,742,267 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | டீசல் மற்றும் வெடிபொருட்களின் விலை மிகவும் கூடுதலாக அதிகரித்ததன் காரணமாக ஒப்பந்தம் வழங்கிய விலைகளிற்கு தொடர்ந்து பொருட்களை வழங்க இயலாதமை குறித்து அறிவிக்கப்பட்டது. திணைக்களப் பெறுகைக் குழுவினால் வழங்குனர் கோரிய விலை அதிகரிப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது . | சிக்கனமற்ற செலவினத்தைத் தவிர்ப்பதற்கு ஆரம்பத்தில் இருந்து முறையான திட்டத்தை வகுத்து செயற்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். |
| (iii) | கரையோரத்தில் அமைக்கப்பட்ட 38 வீடுகள் தொடர்பாக நிலவிய சிக்கலான நிலையைச் சீராக்கிக் கொள்வதற்கும் புகையிரத குறுக்குப் பாதைக்கு கொடிகாட்டுபவர்களை ஈடுபடுத்துவதற்காக புகையிரத திணைக்களத்திற்கு ரூபா 3,567,321 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் புகையிரத குறுக்குப் பாதைக்கு முறையாக கொடிகாட்டுபவர்களை ஈடுபடுத்தாமை மற்றும் பொருட்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் போன்ற காரணங்களால் 2021 நவம்பர் 11 ஆம் திகதி முடிவடைவதற்காக | முறைப்படி வேலைத்தள வேலைகள் முடிவுறுத்தப்படுவதற்கு இயலாது போனதுடன் மீள் பெறுகையினால் இயந்திரங்களும் பொருட்களும் பெறப்பட்டு 2023 ஆம் ஆண்டின் போதான வேலைத்திட்டத்தின் படி வேலைக்கள நிர்மாணிப்பு வேலைகள் இது | நிலவும் சிக்கல்கள் ஆரம்பத்தில் இருந்தே தீர்க்கப்பட்டு செயற்திட்டத்தை குறித்த காலத்திற்குள் முடிவுறுத்தி எதிர்பார்த்த நலனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டம் அத்தினத்தில் முடிவுறுத்துவதற்கு இயலாது போனமையால் மீளாய்வாண்டின் இறுதியில் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 65,919,292 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | வரையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு தொழிநுட்ப உத்தியோகத்தர் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டிருந்த திணைக்களத்தின் இயந்திரப் பொறியியல் வேலைத்தளம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | 02 தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், இயந்திரப் பிரிவிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த தொழிநுட்ப அறிவுடைய உத்தியோகத்தர்கள் சிலர் ஓய்வடைந்துள்ளனர். அரசாங்கக் கொள்கையியல் ரீதியான தீர்மானத்தின் படி பதவியணி ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் வெற்றிடங்களைப் பூர்த்திசெய்யும் இயலுமை இல்லாதுள்ளது. | திணைக்களத்தில் உள்ள பதவியணியை முறையாக நிர்வகித்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தில் கடமையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்குள்ள 1 முதல் 3 வருட காலத்திற்கு உரித்தான ஊழியர் கடன் தொகையான ரூபா 303,061 தொகை தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் படி, 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடர் கடன் தொகையான ரூபா 15,120 தொகையை அறவிட்டுக் கொள்ள வேண்டிய சாரதி மீள சேவையில் அமர்த்தப்படுவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் இடர் கடன் தொகையான ரூபா 156,030 அறவிடுவதற்குள்ள சாரதியின் பிணையாளி இதுவரை தவணைப்பணத்தை அனுப்பியிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் படி, கடன் தொகை மீதியை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆம் 2023 ஆம் ஆண்டுகளில் கடமையை விட்டுச் சென்றிருந்த 04 உத்தியோகத்தர்களிற்கு சம்பளம் மற்றும் படிப்பணமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 189,535 கூட்டுத்தொகையான பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 39,525 தொகை அறவிடுவதற்குள்ள சாரதி மீள சேவையில் அமர்த்துவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மற்றைய இயந்திர இயக்குனரிடம் ரூபா 37,601 தொகையையும், அலுவலக சேவையாளரிடம் ரூபா 44,953 தொகையயும் கள ஊழியரிடம் ரூபா 67,456 | விரைவாக அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தொகையையும் செலுத்துமாறு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை எய்துதல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| காலநிலையை அண்மித்த கரையோர இடர் தடுப்பு மற்றும் கரையோர சுற்றாடல் முறைமையை நிலையாகப் பதுகாப்பது தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் கீழ் தாக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு நிர்வகிப்பதன் மூலம் மண் குவித்தல், சதுப்பு நிலம் மற்றும் உவர் சதுப்பு நிலம் மற்றும் உணர்திறனான 70 ஹெக்டேயர் அளவிலான நிலத்தை பாதுகாத்தல் எனும் இலக்கிடப்பட்ட செயற்பாடு செயற்படுத்தப்பட்டிராமை. | கடந்த சில ஆண்டுகளாக ஒதுக்கீட்டுப் பற்றாக்குறை மற்றும் புதிய செயற்திட்டங்களை ஆரம்பிக்கலாகாதெனும் சுற்றறிக்கை காரணமாக இச் செயற்திட்டத்தை செயற்படுத்தும் இயலுமை இல்லாதிருந்தது. அருகம்பே கடற்கரையோரத்தில் உள்ள உல்லா மணல் திடல் பாதுகாப்பு வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. வழக்கொன்றின் காரணத்தால் அச் செயற்பாடு தாமதமாகியுள்ளது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு இலக்கை எய்த வேண்டியதுடன் அவ்வாறு செயற்படுத்த இயலாத சந்தர்ப்பங்களின் போது திட்டத்தைத் திருத்தி இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் 541 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில், சிரேஷ்ட நிலையில் 126 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இதில் பிரதி பணிப்பாளர்கள், பதில் பணிப்பாளர்கள் (திணைக்களம் சார்ந்த) 06 பதவிகள் உள்ளடங்கலாக சிரேஷ்ட நிலையில் 14 பதவிகளும், மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைப் பதவிகள் 53 உம் ஆரம்ப நிலைப் பதவிகள் 59 உம் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி | சிரேஷ்ட நிலையில் 02 பதவிகளும் நீர் விஞ்ஞான அளவையியலாளர் பதவி 2023 ஆம் ஆண்டிலும் நிர்வாக உத்தியோகத்தரின் பதவி 2024 ஆம் ஆண்டிலும் நிரப்பப்பட்டுள்ளன. பிரதி பணிப்பாளர், பதில் பணிப்பாளர் (திணைக்களம் சார்ந்த) 06 பதவிகளின் வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிலைப் பதவிகளிற்காக பல்துறைச் செயற்திறன் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கனிஷ்ட | தேவையான அங்கீகாரத்தைப் பெற்று ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கோ அல்லது நிலவும் பதவியணியினை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான இயலுமை தொடர்பாக மீளாய்வை மேற்கொண்டு பதவியணி எண்ணிக்கையைத் திருத்திக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்களின் பதவிகள் 90 ஆகக் காணப்பட்ட போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 110 ஆகக் காணப்பட்டமையால் 20 மிகையாகக் காணப்பட்டன. | உத்தியோகத்தர்கள் கள உதவியாளர் பதவிகளிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |